ஓம்.

பரப்ரஹ்மணே நம:.

அன்னதானவிளக்கம்

இது

ஸ்ரீமத்.

தே. அ. சாமிகுப்புசாமி

அவர்களால்

இயற்றப்பட்டது.

மூன்றாம்பதிப்பு.

இதன் விலை] 1932. [அணா 2.

6 - JUL 1932



ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணேநமஃ.

அன்னதான விளக்கம்.

இது

திருத்துருத்தி, இந்திரபீடம்,

ஸ்ரீ கரபாத்திரசுவாமிகளாதீனம்,

ஸ்ரீ. ஈசூர் - சச்சிதாநந்த சுவாமிகளின் திருவடித்தொண்டரும்.

39-ஆவது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்தவரும்

அடியேனுடைய பரமாசாரியருமாகிய

ஆத்மஞானி,

ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின்

பாதசேகரர்,

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டு.

8 - JUL 1932

ஆசிரியர்,

ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

இந்நூலாசிரியரின் திருவடித்தொண்டர்

காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகரால்

சென்னை,

கந்தன் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

இதன் விலை] 1932. [அணா-2

R
N32
226
170 [1]

திருத்துருத்தி, இந்திரப்பீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்;

ஸ்ரீ, பிறைசை, அருணசல சுவாமிகளின் மாணவர்,

ஸ்ரீ, சச்சிதாநந்த சுவாமி.

திருத்தருத்தி, இந்திரபீடம். ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ, ஈசூர், சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்,

ஸ்ரீமத், ஐயாக்கண்ணு தேசிகமூர்த்தி.



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ, ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்

ஸ்ரீமத், தே, அ, சாமி குப்புசாமி.

ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணேநம க.

முகவுரை.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் துதி.

நேரிசை வெண்பா.

வேதாந்தத் துண்மையது வேறல்ல தானென்று
நாதாந்த நற்சிவனே நானிலத்தில்—போதகன்போல்
சங்கரா சாரியனாய்த் தான்றோன்றித் தாளளித்தான்
அங்கவன்றா ளென்னுளென்று மாம்.

தேவப்பிறப்பினும் சிறந்த மக்கட்பிறப்பெய்தப்பெற்ற நாம் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமையதாகிய அந்தமிலின்பத் தழிவில் வீட்டை யடைவதற்கான கல்வி, தவம், தான முதலிய சாதனம் பலவற்றுள் தானமே சிறந்ததாம். அத்தானத்தை 32-ஆகப் பெரியோர் வகுத்துள்ளாரேனும்,

“மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.”

“விஞ்சையுந் தவமுங் கருதினோர் தம்மின்
மேன்மையாந் தானமவ் வாறே
யுஞ்சிடப் புகல்வ னன்னதா னத்தா
லுய்ந்தவர் பயிற்றலா லறிமன்
விஞ்சுதா னத்தி லரும்பய னன்ன
மிருவரும் விரும்புவ ததுவாந்
தஞ்சமாந் தான மளிப்பவன் முதன்மை
தாங்கினோ னுமெனப் புகன்றான்.”

“சொன்ன நல்லறந் தனக்கெலாந் தூயநல் லறமா
மன்ன மீகுதல்.”

"அன்ன தான மறைந்த வற்று ளதிக பலமே" என்னும் ஏதுக்களால் அன்னதானமொன்றே சிறந்ததெனை நிரூபித்திருக்கின்றனர். கல்வி, செல்வ முதலியவற்றை உலகெலாம்புகழ வொருங்கமையப் பெற்றவர் 1. அன்னதானமென்ப தியாது? 2. அதனை யார்க்குச் செய்வது? 3. எவ்வாறு செய்வது? 4. ஏன் செய்வது?

---

1. பசித்து வந்தார்க்குத் தன்னிடத்துள்ள ஆகாரத்தைப் பசிதீர இடுவது.

2. சாதுக்களுக்கும், "அற்றா ரழி[illegible]சி தீர்த்த [illegible]ொருவன், பெற்றான் பொருள்வைப் புழி" என்றபடி ஏழைகட்கும், (கண்ணற்ற) குருடர்கட்கும், (கைகாலற்ற) நொண்டிகட்கும், ஆத[illegible]ற குழந்தைகட்கும், திக்கற்ற விருத்தர்கட்கும், சக்தியற்ற பலவீனர்கட்கும், திசைதப்பிவந்த செல்வர் கட்குமாம். செய்யாக் குற்றஞ்செய்து சிறைப்பட்ட கொடியோர்கட்கும் அன்னமிடல் வழக்காமெனின், அஃது இன்னாரினியரெனக் குறியாது யார்க்குஞ் செய்வதாம்.

3. புகழையும், எதிர்நலத்தையும் விரும்பாது, பொறாமை பேராசை கோபம் கொடுஞ்சொலின்றி, அகமலர்ச்சியேயன்றி முகமலர்ச்சியோடும் இன்சொற்கூறிச் செய்வதாம்.

4. శ్లో॥ కృతే త్వస్థిగతాః ప్రాణాః
త్రేతాయాం - మాంసమాశ్రితాః
ద్వాపరే రుధిరంచైవ
కలౌ త్వన్నాదిషుస్థితాః॥

(இ-ள்.) கிருத யுகத்தில் பிராணன் தேகத்தில் எலும்பைப்பற்றி அது அழியாமலிருக்கு மளவு மிருக்கின்றது, திரேதா யுகத்தில் மாம்சத்தைப் பற்றியும், துவாபர யுகத்தில் ரக்தத்தைப்பற்றியும், கலியுகத்தில் அன்ன முதலான வற்றைப்பற்றியு மிருக்கிறது (எ-று.)

பிராணன் அந்தந்த யுக வல்லமையினால் எலும்பு முதலானவைகளைப் பற்றி யிருக்கிறதென்று சொல்லப்பட்டது. பிராணன் என்பது பிராணன், அபானன், ஸமானன், உதானன், வியானன் என்று ஐந்து ரூபமாகப் பிரிந்து ஹிருதயம், குதம், நாபி, கண்டம், ஸகல சரீரம் இந்த ஐந்து ஸ்தானங்களிலும் கிரமமாக நிற்பவனென்றும் அந்தந்த வாயுவுக்குரிய தொழில்கள் இவையென்றும் மைத்திரேய சாகை கூறுகின்றது. கிருத யுகத்தில் எலும்பைப்பற்றி யிருப்பதால் அந்தக் காலத்தில் தவத்தினால் சரீர முலர்ந்தாலும் பிராணாதாரமான அஸ்திக்கு ஒடுக்க மில்லாமையால் தவம் சிறந்ததாயிற்று, மற்ற யுகங்களுக்கும் இவ்விதமே கண்டு கொள்க என்று **பராசர ஸ்மிருதி ஆசார காண்டம் 32-ஆ**வது சுலோகமும் அதன் வியாக்யானமும் கூறுவதாலும், "அன்னமயம் பிராணமயம்" என்ற வாக்கியமே அதனை வலுயுறுத்துவதாலும், எந் நோயினு மிகுந்த பசிநோய்க்கு அன்னத்தைவிட அவிழ்தம் கிடையா தானதாலும், கர்ப்பத்திலிருக்கும் சிசு முதல் வீயுந் தருணத்தை எதிர்பார்க்கும் விருத்தர் வரையில் வேண்டி நிற்பது அன்ன மாதலாலும், உண்டவர்களை ஜீவர்களை மாறிச் சிவர்களை யுண்டாகக் கண்டபோது இட்டார்க்கோ ரடக்கக் கூடாத ஆநந்தக்களை யுண்டாவதாலும், அவசியம் அன்னதானம் செய்தல் வேண்டும்.

5. எக்காலத்திற் செய்வது? 6. யார் செய்வது? 7. செய்தா ரடையும் பயன் யாது? 8. செய்து பயன்பெற்றார் யாவர்? 9. செய்யார் அடையும் தீது யாது? என்பனவற்றை யெவ்வளவும் எக்காலத்திலு மெண்ணாது தேகமே ஆத்மா, போகமே முத்தி, கண்டதே காட்சி, உண்டதே யுணவு, கொண்டதே கோலமெனப் பண்டைய வேதாகம புராணேதிகாசங்கட்கு விரோதமாய் உண்மை ஞானமுடையவர்க ளருவருக்கத் தமது மனசாட்சிக்கு மாறாகக் காலங்கழித்து வருகின்றனர்.

முற்பிறப்பிற் செய்த நல்வினையால் செல்வத்தை இப்பிறப்பிற் பெற்று இறும்பூதோடு வாழ்பவர்களும், ஊழியம் செய்து கஷ்ட ஜீவனஞ்செய்பவர்களும், தத்தம் குடும்பத்திற்கான செலவுகளைச் செய்துகொண்டு காலந்தள்ளுகின்றனரா வென்று பார்த்தால்,

---

5. எத்தனையோ அடியார்களையும், தாசர்களையும், உய்விக்கவேண்டி ஹர ஹரி பிரமேந்திராதி தேவர்கள் மானிடவுருத்தாங்கி அகாலத்தில் வந்து பிச்சைகேட்டு இரட்சித்தாராதலாலும், அவர்களைப்போலத் தானமீவாரைக் கடவுளர்கள் ஆட்கொள்ளும் கிருபைவைத்து எக்காலத்தில் எவ்வுருத்தாங்கி வருவாரோ வாதலாலும், காலவரையறையின்றிப் பசித்தோர்வருங் காலங்களிலெல்லாம் அவர்க்கு அன்ன தானஞ்செய்தல் வேண்டும்.

6. "சையொத்திருந்தா லையமிட்டுண்" "ஐயம்புகினும் செய்வனசெய்" "இரந்தும் பரிந்திடு" என்னும் ஆன்றோர் வாக்கியப் பிரமாணப்படி உள்ளாரே யன்றி யில்லாரும், யார்க்கும் பசி பொதுவானதால் ஆஸ்திகர்களுக்கே யன்றி நாஸ்திகர்களுக்கும் அன்னதானம் செய்தல் வேண்டும்.

7. "கொடுத்துவைத்த வரையில் எடுத்து வைத்திருக்கும்" "இட்டார்க் கிட்டபலன்" என்றபடி ௪-வகையான வுணவை 6-சுவைக் கறிவகைகளோடு புசிக்கும் பெருஞ் சம்பத்துடையவர்களாயும், "அன்ன மொருவலை யாரொரு பட்சி, அன்ன வலையி லான்வந்து சிக்குவான், அன்ன மெங்குண் டானு மங் குண்டு, அன்னமெங் கில்லை யானுமங் கில்லையே" என்றபடி அரனருட் குப்பாத்திராயுமாவர்; 'இட்டார் பெரியோர்' என்னும் புகழிற்கு முரியராவர்; உணவை விரும்பிவரும் பெரியோர்கள் நன்னிலைமையைப் போதித்துப் பிறப்பிறப்பென்னுந் துன்பக் கடலினின்றுங் கரையேறும் வழியைக் காட்டக் கண்டுகொள்ளும் புண்ணியர்களுமாவர்.

8. இளையான் குடிமாற நாயனார், பொன்னனையார், கபீர்தாசர், துளசிதாசர் முதலிய எண்ணிறந்த பக்த கோடிகளும், பிரபுக்களுமாவார்.

9. இன்ன விடத்தில், இன்ன வேளையில், இன்னார் மூலமாக இவ்வளவு கிடைக்குமென்னும் நம்பிக்கையற்றுக் கைகால் சோர்ந்து, உள்ள நடுங்கி, தேகங்குறுகி, வாய்குளறி, நல்லறிவுமாறிப் பல விடத்துழன்று கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் வருந்தி, உண்டும் உண்ணாமல் சதா காலமுந் துக்கித்துச் சாவர்.

அவ்வாறு செய்துவருபவர் கிடைப்பது துர்லபமென்றே சொல்லலாம். எப்படியெனின்,

சிலர் சுவல்ப கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள மனந்தாளாமல், பிடிவாதங்கொண்டு கோர்ட்டு முதலான நீதித்தலங்களில் வழக்குத் தொடுத்து அபரிமிதமான பணங்களை யிழக்கின்றனர்.

சிலர் தமக்கு முக்கியமான அறிவைச்சாப்பிடும் நறவைச் சாப்பிட்டு அவலராகின்றனர்.

சிலர் பயாஸ்கோப்பு, நாடகம், சர்க்கஸ், ஜாலம், கச்சேரி முதலான வேடிக்கைகளைப் பார்க்க விரும்பி வாய்த்தவிடம்போய் அடுப்பு நெருப்பும் போனதென்ப தொப்ப, துட்டைச்செலவழித்துத் தூயவுடம்பைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

சிலர் மனையாள் தனித்திருந்து மனம் வருந்த, கொடிய வியாதி, தரித்திரம், அகௌரவ முதலிய பல கெடுதிகளைச் சுடுதியிற்றரும் வேசிகளுக்குத் தம்பொருளைத் தாரைவார்த்து, கூத்திக்கிட்டுக் குரங்கானான், வேசிக்கிட்டு விழலானான் என்னும் பட்டங்களைப் பெற்றுப் பாழாகின்றனர்.

சிலர் யாம் ஆசாரமுடையோமென்று சொல்லி நடித்தும், காலட்சேபம் பிரசங்கம் உபந்நியாசங்களின் மூலமாக ஆசாரங்களைப்பிறர்க்குப்போதித்தும், கல்வி அறிவு அந்தஸ்து அதிகாரம் குலவொழுக்க முதலியவற்றைப் பொருட்படுத்தாமல் பார்ப்பார் பத்திமா னென்றெண்ணிக் கொள்ளட்டும் என்ற கருத்தோடு விபூதி உருத்திராக்கம் துளவமணி திருமண் முதலியவற்றைத் தரித்தும், நாணமின்றி வேலைக்காரர்களையும் மனையாள் முதலாயினோரையும் நம்பாமல் மச்ச மாம்சங்களை வாங்கிச் சுமந்துகொண்டு வந்து உடனிருந்து சமைத்துச் சாதங் கறியளவாகவும் கறி சாதமளவாகவும் விலாப்புடைக்கவுண்டும் எமதூதர் நையப்புடைக்கத் தந்தேகத்தைக் கொழுக்க வைக்கின்றனர்.

சிலர் விதம்விதமான சூதுகளாடித் தோல்வியடைந்து பாதகராகின்றனர். சிலர் தத்தம் வருவாயையும் அந்தஸ்தையும் கவனியாமல் விலையுயர்ந்த ஆடைகளை வாங்கி வருஷத்தில் வண்ணான் எட்டு மாதமும் தாம் நான்கு மாதமுமாகக் கட்டி நட்டப்படுகின்றனர்.

கோட்டுமது வேடிக்கை கூத்தி புலால்சூது
வேட்டிக் கழிப்பர் விருதாவாய்த்—தாட்டியுடன்
அன்னமிட் டேழை யரும்பசியை நீக்குவமென்
றுன்னக் குருடாவா ரோர்.

என்பதை ஞாபகத்தில் வைத்து வீண் செலவுகளைச் சுருக்கி, "இவ்வளவேனு மன்ன மிட்டுண்மின்" என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கினைக் கவனித்து, "சங்கில் வார்த்தால் தீர்த்தம் செம்பில் வார்த்தால் தண்ணீர்" என்றாற்போல அன்னதானத்தில் தம் பொருளைச் செலவழிப்பவர்க்கு அவ்வளவுக் கவ்வளவு பகவான் புண்ணியத்தையும் செல்வத்தையும் வளரச் செய்வாரென்பது திண்ணமாம்.

"திரையவித்து நீராட லாகா துரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ லில்லை—பரையராய்ச்
செய்துமா மென்னினு மாகா துளவரையால்
செய்தவர்க்கே யாகுந் திரு"

என்னும் மூதுரை பழுதாமா? இக்காலத்தில் தனவந்தரா யிருப்பவர் முற்பிறப்பில் அன்னதானஞ் செய்தவரென்பதையும், அதனைச் செய்யாதவர் ஏழைகளென்பதையும்,

"மண்ணார் சட்டி கரத்தேந்தி மரநாய் கவ்வுங் காலினராய்
அண்ணாந் தேங்கி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பண்ணார் மொழியார் பாலடிசில் பசும்பொற் கலத்துப் பரிந்தூட்ட
வுண்ணா நின்ற போதொருவர்க் குதவா மாந்த ரிவர்தாமே"

என்னும் பாசுர முணர்த்துமன்றோ? இத்தகைய மகிமை வாய்ந்ததாய் எத்தானத்தினுஞ்சிறந்த வுத்தமதானமானதாயுள்ள இவ்வன்னதானத்தைச் செய்து அதனாலாம் புண்ணியத்தைப் பெறாது அவலனானேனே யென்று பலகால் சிந்தித்த சிந்தை முற்ற, சற்குருநாதனருளேவலை முன்னிட்டு இந்நூலை யான் செய்ய வந்தேனே யல்லாமல் கல்வியாளன், பொருளாளன், தயாளன் என்பவற்றைக் காட்டிக்கொள்ள முன் வந்துள்ளேனல்லேன்.

இலக்கண விலக்கியங்க ளிருந்தவூரினுங் குடியிருந்தறியாத அடியேன் அவாமிகுதியாலெழுதிய இந்நூலிலுள்ள

எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்ற முதலியவற்றைக் கைம்மா றாகவாத காரதுபோலுதவுங் கருணை மூர்த்தியாய், இவ்வுலகுய்யும் வண்ணம் நகரந்தோறுந் தம்மை விரும்புகின்றவரது குலக்குற்றம், குணக்குற்றம், பொருள் வரவு, கல்விக்குறைவு முதலியவற்றை நோக்காமலும், சிரமம் பாராட்டாமலும், புகழை விரும்பாமலும் சென்று சரியையாதி நான்கு பாதங்களையும் அங்கை நெல்லிக்கனியென அஞ்ஞான சந்தேக விபரீதமற அவர்களுக்குப் போதித்து ஞானதாதாவென்னும் புகழுடம் புற்றவராய், எனது சற்குருநாதராய், "லோகோபகாரி" "சக்ரவர்த்தினி" இப்பத்திரிகைகட் கதிபரா யாசிரியராய், இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதராய், வேதாந்ததர்க்க போதகாசிரியராய் விளங்கும் மஹாவித்துவான் ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்கள் பிழை களைந்திதனைச் சீர்செய்துதந்தனர்; அவரது திருவடிகளை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றனன்.

தத்தம் வித்வத்திறமையால் இந்நூலும் ஒரு நூலாகவுலகத்துலாவவேண்டி அன்போடு அரங்கேற்றஞ் செய்த வித்துவான்களுக்கு யான் மனப்பூர்வகமாக வந்தனஞ் செய்கின்றேன்.

இங்ஙனம்.

தே. அ. கு.

ஓம்
தத்சத்
பரப்ரஹ்மணே நம:

சாத்துகவிகள்.

ஸ்ரீ. ஜகத்குரு பீடம்,
நியாயசந்திரரும், வேதாந்த பாஸ்கரரும்,
ஸ்ரீ ஆத்மபுராண ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை முதலிய
நூல்களின்
மொழிபெயர்ப்பாசிரியருமாகிய
ஸ்ரீமத். மகாமண்டலேசுவர வீரசேகர
சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமியவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மோனமா நிலையை யடைந்துநிற் றிருத்தி முடிந்திட லனுபவ மறிவோர்க், கானதே போல வெவர்க்குமே திருத்தி யாக்கிட லன்னமா தானந், தானமா மெவற்றுஞ் சிறந்ததென் றறைந்தார் தவமிகு பெரியவர் மிகவே, யானதே யுலகி லரியவர் புரிந்தா ரதுதனை விளக்கயாக் கிடவே. (௧)

அன்னநற் றுரை விளக்கமென் னூலை யரிதினிற் பயந்தனன் புரிந்தே, யின்னறுங் குணத்தா னேழைகட் கிரங்கி யிசைமிகத் திசையெலாம் பரப்பித், தன்னிய ஞன சாமியாங் குப்பு சாமியென் றிடமிகத் தக்கோன், நன்னிலை பெருக மாமுகத் தொளிரு நாயக னற்றிரு வருளால். (௨)

காஞ்சீபுரம்
ஸ்ரீமத். நிச்சல. இராமாநந்த சுவாமியவர்களியற்றிய
எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நன்னிலைசே ருண்மணமென் டிக்கனைத்தும் வீசு
நாதாந்த னடியளிக்கு நன்மணங்கந் திக்கும்
பொன்னுலகு புகழ்மணமும் போதமணம் பரவும்
பொய்யறமெய்ப் பொருளறிந்து பொருந்துமண நாளுந்
தன்னிகர த்துவிதத் திருமணமு மணக்குந்
தனியருளார் சாமிகுப்புச் சாமியெனும் பெயரான்
மன்னுமன்ப னனதான விளக்கமெனு நன்னூல்
வாய்மலர்ந்த வெண்பாவா மாமலர்க ளிடத்தே.

ஷை சுவாமியவர்களின் பாதசேகரர்

ஸ்ரீமத். சொருபாநந்தமணி சுவாமியவர்களியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவிளங்குஞ் சிவஞான சித்தியெலாம் விளங்குஞ்
சின்மயராய் விளங்கடியார் கருணையது விளங்கும்
பொருள்விளங்கு மெய்யறிவாம் போதசுகம் விளங்கும்
பொன்னுட்டின் வாழ்வனைத்தும் பொய்யெனவே விள [ங்கும்
தெருள்விளங்கு மத்துவிதா நந்தசுகம் விளங்குஞ்
சிற்சுகனுஞ் சாமிகுப்புச் சாமியெனுஞ் சீரா
னருள்விளங்க வளித்தவன தானவிளக் கத்தா
லடைமகிமை யென்னுலிங் கறிந்துரைக்கற் பாற்ரு.

சிவரகசியப் பதிப்பாசிரியர்

சென்னை ஸ்ரீமத். க. சதாசிவ செட்டியார் B-A. அவர்கள் எழுதிய சிறப்புரை.

ஸ்ரீமான் சாமிகுப்புசாமி என்பவரால் செய்தனுப்பப்பட்ட "அன்னதானவிளக்கம்" என்னும் புத்தகம் வரப்பெற்றுஉவந்தேன். இவர் அன்னதானத்தை அனுதினமும் அனுசரித்து உபகரிப்பவராய் அதனைப் பிறரும் மேற்கொள்ளுமாறு இந்நூல் வாயிலாகப் போதிக்க முன்வருதலின், இவர் செய்கை வாசாகயிங்கரியமாவதன்று. அன்னதானம் ஏற்போர்க்குப் பசிப்பிணிமாற்றி இன்பம் பயத்தலின், ஈவோர்க்கு இம்மையில் கீர்த்திப் பிரதாபங்களும், மறுமையில் புருடார்த்தங்களும் ஒருங்கே தருதலின் எல்லாத்தானத்திலும் மேலானதாம். இத்தகைய பேரறத்தை விளக்க வெழுந்த விந்நூல்போற்றப்பட வேண்டியதே. இந்நூலுள் அமைந்த வெண்பா யாவும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலென்னும் வகையில் சொற்சுருங்கி, பொருள் பல்கி இலக்கண அமைதிபெற்றுப் படிக்கப்படிக்க இன்பம் பயக்குந் தன்மையவாய் இருக்கின்றன. இம்முயற்சி பலவகையிலும் வியக்கத்தக்கது. இந்நூல் என்று நின்று நிலவுமாறு ஸர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றனம்.

சென்னை, ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தரும்,
ஸ்ரீ கச்சபேசுர சுவாமி தேவஸ்தான டிரஸ்டியும்,
ஸ்ரீ உமாமகேஸ்வரர் தமிழ்வேதபாராயண பக்த ஜனசபை பிரசிடெண்டும்,
ஸ்ரீ தர்மசிவாசாரியார் மடம் கமிட்டி மெம்பரும்,
வைசியகுல பேரிசெட்டிமார் சங்க மானேஜிங் கமிட்டி மெம்பருமாகிய
ஸ்ரீமத் - பழவை - இரத்தினசபாபதி செட்டியாரவர்கள். எழுதிய

சிறப்புரை.

ஆழிசூழ்ந்த இவ்வவனிபீதினில் அறத்தாறு, ஒண்பொருள் ஈட்டிய ஒருவன் அப்பொருள் வைப்புழி அற்றவர் அழிபசி தீர்வுழி என்பதருமறை. ஆற்றுமாக்கள் அரும்பசிகளைவோர் மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை என்றனர் மேலோர். அம்மெய்ந்நெறியே கூறும் இந்நூல், சோறிட்டார் பெற்றபலன் சொல்லரிதாம் என்னும்; அன்னதானமே பன்னுதானம் பலவற்றினும் பரமதானங்காண் என்னும்; என்னை? ஊன் உயிர்நீங்கும் உறுப்பொடு தோன்றி வயிறுகாய் பெரும் பசி வருத்தும் மாக்கட்கு வெயில் சுடவெம்பிய வேய்கரிகானத்துக் கருவி மாமழை போன்றதன்றோ இத்தானம்? ஈதன்றோ தலையாய அறம்? இஃது உயிர்க்கொடையன்றோ? மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே. அவ்வுரவோர் திறமன்றோ இவ்வறநூல் கூறுவது? உரைப்பார் உரைப்பவையும் அவையே யன்றோ? வெள்ளவேணி விமலனார்க்கு உள்ளன்போடு மெய்யடிமை பூண்டு அசனமளித் தகமகிழ்ந்த வசவணாதியோரை ஈங்குரைத்ததும், எவ்வுயிருந்தாமாக எவ்வமறக்கண்டு ஆருயிர் மருந்தாம் அன்னமளித்த உயிர்க்கொடையாளர் இசைவிளக்கினதன்றோ? ஆகலின், பசியென்னுந் தீப்பிணிமாற்றுவார் ஆற்றலைப் பன்னாளும் ஓர்ந்து பகுத்துரைத்தார் இந்நூலில் சாமிகுப்பு சாமிக்குரிசில். அவர் இயற்றிய இவ்வறநூல் வழிநிற்பார் செல்லுந்தேஎத்துக் குறுதுணை தேடுவாரென்பது சொல்லவும் வேண்டுமோ?

புதுவைத் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியும், தமிழ்மகவு
உபபத்திராசிரியருமாகிய தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத். வீ. துரைசாமி முதலியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

பூவுலகி லன்னமிடும் புண்ணியத்தி னற்பொலிவைத்
தாவுரை யின்விரித்துச் சொற்றனனுன்—மேவுபுகழ்க்
குப்புசா மிக்குரிசில் கூறுபுவி யோர்மகிழ்ந்து
செப்புவா ரன்னவன்றன் சீர்.

புதுவை. ஆநந்தாஸ்ரம சாது மகாசங்கத்தின்
உப நாயகர் ஸ்ரீமத். ஜெகந்நாதநாயுடவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

அயலாய் விளங்குவதை யாராய்ந்து பார்த்துச்
சுயவறிவே யென்று துணியத்—தயவுடனே
யன்ன மிடுங்க ளரனடியைப் பேணுங்க
ளென்னுஞ் சுருதி யிசைந்து (௧)

அச்சுருதி கூறுகின்ற வன்னதா னந்தன்னை
மெச்சி யொருவிளக்க மோதினு—னச்சமிலாச்
சாமிகுப்பு சாமியெனுந் தன்னிலக்க ணம்வல்லான்
நாமிதனை யேற்றிடுவா நன்கு. (௨)

சித்தந் தனிலுள்ள தீங்கெல்லாம் போக்கியதைச்
சுத்தப் படுத்திச் சுகமாக்கச்—சித்தத்தி
லெண்ணுவா ரிந்நூலை யென்நேர முஞ்சிந்தை
பண்ணுவார் மிக்குப் பரிந்து. (௩)

புராணிகர்
தேவாரம். ஸ்ரீமத். சி. சம்பந்த முதலியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பசுபத மளிக்கின் மீளாப் பதம்பதி யளிக்கு மேன்மை
யுசிதமா ரன்ன தான விளக்கமென் றொருநூல் வைய
நிசியிரு ளகற்ற பானு நிலவுமா றுலவத் தந்தா
னசிபத முணர்ந்த சாமி குப்புசா மிக்கோ னன்பால்.

சம்பத்கிரி. பிரமபீடம்
ஸ்ரீ. அச்சுதாநந்தசுவாமி யவர்களின் மாணவர்
கல்தம்பாடி. ஸ்ரீமத். முத்துக்கிருஷ்ணதாச ரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

தானத்தின் மிக்கதெனச் சாற்று மெழிலன்ன
தானத்தின் றன்மை தனைத்தெரித்தான்—ஞானத்தின்
தக்ககலை யாவுந்தேர் சாமிகுப்புச் சாமியெனு
மிக்கவனிங் கார்க்கும் விரித்து.

ஷை சுவாமியவர்களின் மாணவர்
களர். ஸ்ரீமத். ஆ. கங்காதர முதலியாரவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகில்வா ழுயிர்கள் பவப்பணி யொழிதற் குற்றநற் சாதன மாகு, நலமிகு மன்ன தானநல் விளக்க நல்கினன் கற்பவர்க் கெளி தாய்க், கலகமிக் குடைய பொறிபுலச் சேட்டை கழிந்துதன் னிலையுணர்ந் தறிவா, யிலகுறு சாமி குப்புசா மிப்பே ரேந்தனற் சென்னைவாழ்க் கையனே.

ஷை சுவாமியவர்களின் மாணவர். வித்துவான்
வல்லநகர். ஸ்ரீமத். வைத்தியலிங்கம்பிள்ளையவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

ஞான விளக்கமுறு நற்குப்பு சாமியன்ன
தான விளக்கந் தனையுதவி—யீன
ருதவா ரகத்திருளை யோட்டிவாழ் வித்தா
னிதவா சகத்தா னியைந்து.

களம்பூர். வித்வான்.
ஸ்ரீமத். சே. செல்லப்பமுதலியா ரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

தன்னிகர் சென்னைநகர் தன்னிற் சிறப்புடைய
பொன்னிகர் குப்புசா மிப்புகழா—னன்னிகர்
சார்ந்துவண்பா லீண்டன்ன தானவிளக் கப்பெயர்கொ
டேர்ந்தவெண்பா வாற்றந்தான் செய்து.

திருநதிக்குன்றம். ஸ்ரீ. சண்முகாநந்த நிலையத்தலைவர்
ஸ்ரீமத். சு. கு. அரிபுத்திரபிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பன்னு கலையுணர்ந்த பாவலரெ லாமேற்க
வன்னதா னத்தீவ மாக்கினு—னன்னலஞ்சேர்
சென்னை நகரிற் றிகழுங் குணவாளன்
மன்னுகுப்பு சாமி மகான்.

காமக்கூர். தமிழ்ப்பண்டிதர். ஸ்ரீமத். சுந்தரமுதலியா
ரவர்களின் மாணவரும்,
ஐயம்பேட்டை-உபாத்தியாயருமாகிய
ஸ்ரீமத். நா. முனிசாமிமுதலியாரவர்களியற்றிய

சந்தவிருத்தம்.

பன்னிடும்பொரு டோன்ற நயமொடு பாரில் யாவரு முய்யவே
யன்ன தானவி ளக்க மென்னுமோ ரரிய நூலை யளித்தன
னின்ன றீர்தரு சென்னை யில்வள ரெழிலுறுங் குப்பு சாமியாந்
துன்ன ரும்பர ஞானி யான்புகழ் சொல்லு தற்கரி தாமரோ.

களம்பூர்-போர்டிஸ்கூல் உபாத்தியாயர்
ஸ்ரீமத். பழனிவேற் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அளக்கரிய பெருமையெலா மவனியினோ ரறிந்துய்ய வன்ன தான, விளக்கமதை வெண்பாவான் வியனயங்கண் மிகவிளங்க விரும்பிச் சொற்று, ளுளக்குற்ற மொருசிறிது முற்றிடா துயர் நூல்க ளுணர்ந்தோன் சென்னை, விளற்கரிய சாமிகுப்பு சாமி யெனு மபிதான விழுமி யோனே.

காமக்கூர் - சுந்தரக்கல்விச்சங்கம்
முனியநகர். ஸ்ரீமத். சந்திரசேகரப்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தலையான தானமிது வென்னவுல கோரறியத் தகுநூ லாய்ந்து
நிலையான வன்னதா னத்தீவ மொளிநிரம்பி நிலவத் தந்தா
னலையான வாரிதிசூ ழவனிபுகழ் சென்னையினி லழகாய் வாழுங்
கலையான சாமிகுப்பு சாமியெனுஞ் செய்யதமிழ்க் கவிஞன் மாதோ.

சென்னை நகரபரிபாலனசபை அங்கத்தினர்.
சென்னை, ஹைகோர்ட் அட்வகேட்.
ஸ்ரீமத். தே. மீனாக்ஷிசுந்தரனார் M-A, B-L, Dip, Ec,
அவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

சாமிகுப்புச் சாமியெனுந் தக்கோனு நாவலவ
னாமி தழகிதென வாழிசூழ்—பூமியுளார்
போற்றனதா னம்விளக்கம் பொற்பாக வேசெய்து
சாற்றினனே மெய்ஞ்ஞானஞ் சார்ந்து.

வித்தியாவதானம்
ஸ்ரீமத். பிரம்பை. பொன்னுவேற்பிள்ளையவர்களியற்றிய
எழுசீர்வண்ண விருத்தம்.

ஆலுமறை நான்கொருங்கு தானுரைசெய் தானந்தமு
ளானமுதற் றானமென்ன வறைவாரே
சீலவன தானந்தன்னை நாளுமிதை யேவிரும்பித்
தேடிபல வேழையுண்ண விடுவானே
மேலவர்க ளேபுகழ்ந்து கூறுமன தானமென்னு
மேன்மைமிகு மோர்விளக்கந் தருவோனே
தாலமதிற் றேனைவந்த சாந்தகுண மேருவென்னுஞ்
சாமிகுப்பு சாமியெங்கள் குரவோனே

சென்னை நியாயப் பெருந்தலம் நியாயவாதி
ஸ்ரீமத் ஈ. ந. தணிகாசல முதலியார் பி-ஏ, பி-எல். அட்வகேட்
அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இரப்பவர்க் கீய வைத்தா ரீபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநா கங்க ளென்று
பரப்புநீர் கங்கை சூடி பாடுநா வரசின் கூற்று
நிரப்பிடத் தோன்றுஞ் சாமி குப்புசா மியாய்நின் றனே. (௧)

பல்லறங் களினு நல்ல பார்மிசை யன்ன தான
மில்லறத் தவர்கள் செய்யா திருந்தெனன்கொ விராத தாமே
பல்லியல் கலைகள் கற்றீர் பகுத்திதை புணர்வீ ரென்னை
நல்லிசை வெண்பா நாற்றைம் பதுதமை நல்கி னுனைல். (௨)

மாதரா ரிடம்ப மென்னு மாணிட மயக்க மாகுந்
தீதினைப் பாற்று விக்குந் திருமுறை யிதுவே யென்னை
கோதிலாத் தான மாகுங் கொள்ளுணை வளிக்குந் தானம்
போதியா நிற்கு மன்ன தானவி ளக்கப் பாவே. (௩)

இன்னதே முத்தி நாலென் றியம்பினு மமையு மென்ப
ரன்னதின் செந்த மிழ்ச்சொல் லழகுட னமைந்த தென்பர்
முன்னதா மெதற்கு மிந்நான் முனிவரு மேனை யோருஞ்
சொன்னவா றியம்பு மாறு சொல்லிடற் கெல்லை யின்றே (௪)

Swami Kuppusawmy avergal has sent me a copy of his Annadana Vilakkam for my perusal. It is a work which is greatly needed in the modern civilisation influenced by the Western custom of putting beggars in prison. Our land was once a land of charity and hospitality even to aliens and enemies, and this work is intended to stir up the ancient virtue, which is lying dormant, if not dead in us. Our ancestors never liked the idea of the worst human being starving at our doors. The learned author forcibly and gracefully presents in pithy and beautiful Venbas how ANNADANAM or giving alms by foodstuffs, is indispensible to any human being who seeks the elevation of his soul.

E. T. CHOCKAMMAL B.A.,L.T.,
Honorary Presidency Magistrate, Madras.

ஷ ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஷ முதலியாரவர்களின் திருமகளாராகிய

ஸ்ரீமதி. ஈ. த. சோக்கம்மையார் பி-ஏ. எல்-டி.

சென்னை கௌரவ இராஜதானி நியாயாதிபதி அவர்கள் எழுதிய

வசனம்.

சுவாமி குப்புசாமி அவர்கள் தாமெழுதிய அன்னதான விளக்கம் என்னும் நூலை நான் வாசித்தறிய அனுப்பியுள்ளார். இரப்பவருக்கீயாது அவரைச் சிறையிலடைக்கும் மேல்நாட்டு நாகரிகம் விஞ்சிய இக்காலத்தில், இதுபோன்ற நூல் இன்றியமையாதது. நமது நாடு, ஒரு காலத்தில் பிறநாட்டாரையும், பகைவரையுங்கூட வரவேற்றுப் பல தருமங்களைச்செய்த நாடு. அறவே ஒழிந்து போகாவிட்டாலும், காணவரியதாய் நம்முள் மறைந்து கிடக்கும் முன்னைய முழுநெறிகளை (நன்னெறிகளை) வெளிக்கிளப்பும் வண்ணம் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. கடையாய மானுடனுங்கூட நமது வாயிலில் பசித்திருக்கத் தரியாதவர், நம்முதாதையர். அன்னதானம் அல்லது உணவுப்பொருளை ஐயமிடுதல், ஆத்மலாபத்தைக் கருதும் ஒவ்வொரு மானுடனுக்கும் இன்றியமையாதது என்று மனதிலூன்றும்படியாயும், பக்குவமாயும், அழகான வெண்பாப் பாவினால், சுருக்கமாயும், அதனை நமது அறிவிற்சிறந்த ஆசிரியர் தெரிவித்திருக்கிறார்.

ஷ அம்மையாரவர்களின் சகோதரியும்

சைவசித்தாந்த மகாசமாச்சிய நிர்வாக சபை அங்கத்தினருமாகிய

ஸ்ரீமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் எம்-ஏ.

அவர்களியற்றிய

கலி விருத்தம்.

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
அன்னம் பாலிக்குஞ் சாமிகுப் புசாமி
அன்ன மேற்போ ரெனைனு மாசையோ
டன்ன தான மளிக்கு முறைமையை.

சொல்லுஞ் செய்கையுஞ் சோர்வுப டாமலே
அல்லும் பகலுமளித்திடுந் தன்மையன்
எல்லை யிற்பய னீந்திடுந் தானமே
நல்கு சோறுமுண் ணீரும்மெ வர்க்குமாம்.

சதலா மன்ன தான விளக்கமே
காத லோடுக றந்தபால் கன்னலோ
டோது வேத சிரப்பொரு ளுறவே
ஏத மின்றியெ வர்க்கும் விளக்குமே.

I have read with great pleasure the work ANNADANA VILAKKAM of Sri Swami Kuppusawmi avergal. Its main point of beauty lies in the sincerety of expression, and hence his statements therein are mostly original, appealing both to the heart and the Brain. He acted the life which he preaches, and so he is the best author that can be consulted for a work of that kind.

E. T. PADMAVATHY AMMAL. B.A.,
L. T. Pupil, Lady Willingdon's
Training College, Madras.

ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஷை அம்மையாரவர்களின் சகோதரியாராகிய

ஸ்ரீமதி. ஈ. த. பத்மாவதி அம்மையார் பி-ஏ.

அவர்கள் எழுதிய

வசனம்.

ஸ்ரீ சுவாமி குப்புசாமி அவர்கள் எழுதிய அன்னதான விளக்கம் என்னும் நூலை மிகக் களிப்புடன் ஓதினேன். அதிற்கண்ட சொற்கூற்றின் உண்மையே அந்நூலிலுள்ள முக்கிய அழகாம்; அதனால், அதிற்கண்ட கூற்றுகளெல்லாம் புதுமை வாய்ந்தவையாயும், அறிவிற்கேயன்றி மனதிற்கு மொத்தவையாயுமிருக்கின்றன. அவர் உபதேசிக்கும் வாழ்க்கை நிலையை அவரே தம் ஒழுக்கத்தால் நடந்து காட்டியிருப்பதால், இதுபோன்ற நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் உண்மைகளை அறிவதற்கு இவ்வாசிரியர் இயற்றிய நூலே சிறந்த நூலாகும்.

ஸ்ரீ அகத்திய மஹாரிஷி மரபு. சாது நாராயண தேசிகர்

மடாலயாதிபதி.

உயர் திரு. சுவாமி. ஞானாநந்த மணவாள முனிகளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பன்னருந் தான மெல்லாம் பயந்திடும் பலனு மீயு
மின்னுறு மன்ன தான விளக்கமென் றொருநூல் சொற்று
ணின்னமு தில்லார்க் கீந்திங் கெம்மனோர்க் கெல்லா மீயுந்
தன்னீயாஞ் சாமி குப்பு சாமிதன் னளிமிக் கோனே.

ஷை சுவாமிகளின் பிரதம சீடர்
உயர் திரு. சுவாமி. அருணகிரி நாதனியற்றிய
நேரிசை வெண்பா.

துளக்கமிலா மெய்யறிவாற் றாயவன்ன தான
விளக்கமென வோர்நூலை விண்டா—னளக்கரிய
நேமிதனில் வள்ளுவர்போ னீங்காப் புகழ்படைத்த
சாமிகுப்பு சாமிமகான் றான்.

சென்னை, பெத்து நாய்க்கன்பேட்டை, தையப்ப முதலி வீதி,
Retired sub registrar.
ஸ்ரீமத். மேலவலம். சிவகாருண்ய முதலியார் B-A.
அவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நேமிசூழ் ஞாலந் தன்னி னிலவுதா னங்கட் குள்ளே
ஆமிகச் சிறந்த தென்ற வன்னதா னத்தைப் பாவில்
பீமிசைச் சிறந்த வெண்பா விளம்பியே விளக்கஞ் செய்தான்
சாமியின் சிறந்த சாமி குப்புசா மிப்பேர்ச் சாமி.

ஷை முதலியாரவர்களின் திருமைந்தர்
ஸ்ரீமத். மே. சி. கலியாண சுந்தர முதலியாரவர்களியற்றிய
இன்னிசை வெண்பா.

சத்துவக்குந் தண்ணளியா னெத்திசையும் போய்மணந்த
சீர்த்தியான் பொல்லா மயக்கொழித்த செம்மனத்தான்
சார்த்துரைத்த லாகாத சாமிகுப்பு சாமியெனு
மாத்திரள ருள்பொழியு மஞ்சு. (க)

உயர்தலை நல்லறமா மூண்வழங்க லஃதே
பெயர்முறையிற் பின்னிலைய முப்பொருட் பேறுமென்
றயர்வின் றறிவுற நல்கினன்வெண் பாவி
லுயரன்ன தானமென் றோர்ந்து. (உ)

தம்மகடு தாகிரப்பித் தண்டாப் பசியினர்க்குந்
தம்மகனெக் கீகிலாப் பேதை யருளிலிகள்
மம்ம ரகத்தகற்றி மாறற்ற நல்லறத்தா
னெம்மையு மேமுற் றுய. (ங)

இந்நூலாசிரியரின் மாணவர்களுள் ளொருவர்
திருப்புலிவனம். ஸ்ரீமத். தி. கு. கன்னியப்ப முதலியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

என்னைவலிந் தாண்ட விறைவன் குருநாதன்
தன்னையுணர் சாமிகுப்பு சாமியவன்—பொன்னையொப்பத்
தந்தருளி னன்ன தான விளக்கநூல்
செந்தமிழ்வெண் பாவாற் றெளிந்து.

பெருமாள் திருமொழி விரிவுரை யாசிரியர். பிரசங்க பூஷணம்
ஸ்ரீமத். பு. பா. இரத்தினசபாபதி நாயகரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கடல்புடைசூழ் நிலவுலகிற் பலவிளக்கஞ் செய்தபெருங் கருணையாள, னடல்மிகுத்த திண்டோளா னருங்கலையா னுறை நாவா ரழகன் வாய்ந்த, வுடல்வளர வுயிர்வளர வனதான மெந் நாளு முயரச் செய்து, திடஞானப் பெருஞ்செல்வந் தன்னோடும் பொருட்செல்வந் திணியப் பெற்றோன்.

தானடைந்த வநுபவத்தைப் பிறர்க்குரைக்கு மருஞ்செயலாந் தகவு தன்னோன், ஞானமுனி வரனெமது சாமிகுப்பு சாமியெனு ஞாதா வாமோ, னனவன தானத்தை விளக்கிவைக்கு மிந்நூலை யருள்செய் தானோன், மானவர்கா ளிந்நூலி னுரையமுதை மிகப் பருகி மகிழ்க மாதோ.

இந்நூலாசிரியரின் மாணவர்களுள்ளொருவர். திருவான்மியூர்.
பிரசங்க சிந்தாமணி.
ஸ்ரீமத். த. கோவிந்தசாமி பிள்ளை யவர்களியற்றிய
நிலைமண்டில வாசிரியப்பா.

பொன்னார் மேனிப் புனித சிவனார்
தன்னா ணையின்றற் சதுர்முகன் படைத்த
காசினி மேவுங் கணக்கிலாச் சீவருள்
மாசிலா துயர்ந்த மானுட ரடையும்
பெரும்பயன் யாதெனிற் பிஞ்ஞக னன்ப
ரரும்பசிக் கன்ன மளித்துப் பின்னுண
லெனப்பல நூல்க ளியம்புத லோர்ந்து
தனதகம் வந்திடுந் தவசிகண் மூப்பர்
பிழைகொ ணோயினர் பேணுறப் பிலாதவ
ரேழைகட் கன்ன மிட்டுண் டதனாற்
சீர்பெறுஞ் செல்வமுந் திகழ்ந்திடு ஞானமும்
பேர்பெறு கீர்த்தியும் பெற்று விளங்கித்
தன்போ லன்ன தானமிப் பாரோ
ரின்போ டியற்ற வியம்பின னன்ன
தான விளக்கத் தக்கநன் னூலை
மோன ஞான முழுது முணர்ந்த
சாமி குப்பு சாமி யென்று
மேமி புகழ்நிமலனெங் குருவே.

ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணே நம:

அன்னதான விளக்கம்.

பாயிரம்.

விநாயகக் கடவுள் வணக்கம்.

ஆனை முகத்தோனை யாரறிவாக் கண்டன்ன
தான விளக்கத் தகுநூலை—யேனையரும்
பொல்லா மனமகற்றிப் போற்றற்கா விங்களித்தேன்
வல்லான் கருணைபெற வந்து. (௧)

சொரூப வணக்கம்.

வாசாம கோசரமாய் வாக்குமன மில்லாதா
யாசாபா சம்மற்ற வாரறிவைப்—பேசார்
சொருபமெனக் கண்டியான் றோத்தரித்தே னென்றுஞ்
சொருபவணக் கம்மீதே சூழ். (௨)

சபாநாதர் வணக்கம்.

சிதம்பரமாம் பொற்சபையிற் செய்யதா ளேக்கி
விதம்விதமா வன்பர் வினைக்காப்—பதமா
நடம்புரியு நாதன்ற னற்பதத்தை யுன்னி
யடமகற்றிப் போற்றுநெஞ்சே யாய்ந்து. (௩)

68536

பரமாசிரியர் வணக்கம்.

இந்திரிய டத்தரசா வேத்துசச்சி தாநந்த
வந்தமிலா வென்பரம வாசிரியன்—பந்தமிலாப்
பொன்னடிணை வேண்டிப் புனிதவன தானமதைச்
சொன்னேனே நூலாய்த் துணிந்து. (௪)

ஆசிரியர் வணக்கம்.

வேதத்தி னுச்சி விளைவே குருவடிவா
வேதமற வந்தெ னிழிவினையைக்—காதலுடன்
போக்குமையாக் கண்ணளித்த புண்ணியத்தா லிந்நூலை
யாக்கினே னன்னமிடற் காய்ந்து. (௫)

மகான்கள் வணக்கம்.

சுத்தபர ஞான துரியநிலை கண்டோர்கள்
பத்தருரை தட்டாத பத்தினிகள்—முத்த
ரடிபணிந் தேதுதிக்கு மன்பரன மீவோ
ரடிபணிந்தே னுள்ளமகிழ்ந் தாய்ந்து. (௬)

நூற்பயன்.

ஆடவனு மாடவளு மன்புளமொத் தன்னமிடிற்
றேடமற வீசனரு டோய்ந்தென்றும்—வீடமர்ந்து
வாழ்ந்திருப்ப ரிந்நால் வகுத்தபடி செய்வாரேற்
றாழ்ந்திருக்கா ரெம்மாணை தான். (௭)

அவையடக்கம்.

பசித்தோர்கட் கன்னமிடாப் பாவியிந் நூலைக்
கசியன் புடையேன்போற் கண்டேன்—சசிமுடியோர்க்
கன்பரெலா மாதரிப்பா ராதரியா தென்போல்வார்
வன்மனத்தாற் றுமிழுப்பார் வம்பு. (௮)

கற்றவர்கண் முன்னென்றுங் கல்லா வறிவில்லேன்
பற்றகன்றூன் போலிந்நூற் பாடியது—சிற்றெறும்
பாழியா ழுங்கண் டடைந்தேனென் றேகூறிப்
பாழி படைத்தொக்கும் பார்த்து. (௯)

எம்பெருமான் பாட்டிற் கிசைத்தாரேற் குற்றமொன்று
செம்மையிலா வென்கவிக்குச் செப்பாரோ—வெம்மவர்க
ளன்னமிட் டுண்ண வறைந்தநூ லாதலினு
லென்னகுற்றஞ் சொல்வா ரிதற்கு. (௰)

பாயிரம் முற்றிற்று.

நூல்.

நல்லறிவ ஞானியரு நன்றென்ப ரிட்டுண்ணல்
சொல்லல்ல வென்னுரையைச் சோதிப்பீர்—செல்வரே
யன்னமிட்டா ரில்ல மடைவியிடு காடென்று
பன்னூலுங் கூறும் பகுத்து. (க)

பணப்பற் றுடையவரார் பாராரீ சான்றுள்
பணப்பற் றகன்றாரே பார்ப்பர்—பணத்தினர்தா
மன்னமிட் டுண்ணுவரே லற்றாருங் கற்றாரு
மன்னப் புகழ்வார் மகிழ்ந்து. (உ)

அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை யென்றா
றமனத்து வள்ளுவனா ராய்ந்திங்—கறமே
விரும்பென்றார் நம்மவ்வை மிக்கறத்தைச் செய்வார்
பெரும்பயனைச் சேர்வார் பெரிது. (ங)

நிலைமையாச் செல்வங்கள் வாய்ந்து மகிழ்வா
ரிலையென்ன தன்ன மிரப்பார்க்—கலைவகற்றி
யிட்டுண்டு வாழ்வாரே யின்பமெல் லாம்பெறுவர்
கட்டுண்ணா ரென்றுங் கதித்து. (ச)

உண்ணா தடுக்கா துளபொருளா னல்லறங்கள்
பண்ணா திருத்தியென் றன் பாழ்மனமே—யெண்ணான்கு
தொல்லறஞ்செய் யாவிடினுஞ் சொல்லன்ன தானமெனு
நல்லறஞ்செய் யின்பநிலை நாடு. (ரு)

அன்ன மானுருவ மாமென்றே பன்னூலுஞ்
சொன்னவிவ் வுண்மையினைச் சோதியுங்க—ளன்ன
மருந்தாதார்க் கின்பமிலை யாய்ந்துணர்ந்து காண்மின்
பொருந்துமா றன்னமிடப் போம். (சு)

ஆண்டிகண் டார்போ லபிநயித்து நிற்போ
மாண்டியைக் காணுமா றேயோம்—பரனுருவ
மன்ன வடிவென் றறியா திருக்கின்றே
மென்னகதி யாவோ மிருந்து. (எ)

பத்தியுளார் போலப் பகட்டிப் பசித்தவருக்
கத்திக்கா யின்னளவு மன்னமிடோம்—பத்தியு
டன்னமிடு வோமாயி னன்புருவ மாவமிங்குத்
தன்னமும்பொய் யன்றுண்மை தான். (அ)

அன்னத்தா லன்றி யருளைப் பெறலரிதா
மன்னமி டாருக் கருளில்லை—யன்னத்
தகிலம் விளங்கு மறிவெல்லாந் தோன்றும்
பகிரங்க மாயறிந்து பார். (கூ)

அற்றூர்க்கொன் றீத லறமாமென் றெய்ந்துணர்வாய்
கற்றுமறி வில்லாத கன்னெஞ்சே—பற்றில்லாப்
பண்டிதரைப் போலப் பகட்டிற் பயனில்லை
பிண்டைமுடி யோனடியார்க் கீ. (கo)

பணங்காக்கும் பூதம்போற் பாழ்மனமே பொன்னைக்
கணமும் பிரியாது காத்தாற்—றுணையோ
தினமுந் தவறாது திக்கில்லார்க் கன்ன
மனமகிழ்ந் தீவதே பாண்டு. (கக)

மாதருரை கேட்டு மயங்காதீ ரன்னமிட
மாதருரை கேட்பவர்க்கு மாநரக—மாதருக்குத்
தன்மயமாய்ச் சாந்தமுறத் தன்மநெறி சாற்றியே
நன்மையன நல்லோர்க்கு நல்கு. (கஉ)

இடம்பத்தை நாடியன மிட்டாலும் புண்ய
மிடம்பத்தால் வீணுமென் றெண்ணேன்—மடம்படவா
யன்னமிட்டிட் டேவந்தா லக்குணம்போய்ச் சாந்தகுண
முன்னு ளுதிக்கு முவந்து. (கங)

கண்ணுங் கருத்துங் காமுந் துவளாமுன்
விண்ணுலகுங் கண்டு வியந்தோத—மண்ணுலகிற்
கண்டார் வியப்பக் கருணையா யன்னமிட்டா
லண்டா னியமனறி. (கச)

ஏமன் வருமுன்னே யேனழரா மாகுமுன்னே
காமகோ யாதி கலக்குமுன்னே—மாமணியார்
போவென்று கூறவுயிர் போமுன்னே யேழைகளை
வாவென் றனமளித்து வாழ். (கரு)

செல்வமது செல்வமெனச் செப்பாம லேசெல்லுஞ்
செல்வமெனுஞ் சொற்பொருளைத் தேர்ந்தறிமின்—செல்வர்கா
ளில்லையென் பார்க்கன்ன மில்லையென் றுதவிமி
னெல்லையில்பே ரின்புண் டுமக்கு. (கசு)

பசிபொதுவா மன்றிப் பசியிலிரண் டில்லை
கசியுமன் பில்லாக் கருமி—பசியென்று
வந்தவர்யா ராயினுநீ மாறா தனமீவாய்
சொந்தஞ் சுவர்க்கந் துணி. (கஎ)

அன்னமிட் டுண்பாரை யண்டமெல் லாந்துதிக்கு
மன்னமிட வஞ்சாதீ ரறிவீ—ரன்னமிட்டா
னல்லவர்க ளுண்மகிப்பர் நற்பொருளெல் லாஞ்சேரும்
வல்லநமன் வாதைசெயான் வந்து. (கஅ)

பிச்சையிட் டுண்பதற்குப் பின்வாங்கேல் பேய்மனமே
பிச்சையிட்டாற் றீமையெலாம் பின்வாங்கும்—பிச்சையிடார்
நாயாய்ப் பிறந்துழன்று நல்லுணவுக் கேக்குற்றுப்
பேயாய்த் திரிவார் பிறகு. (க௯)

மரம்பழுத்தாற் பட்சிகளை வாவென்று முண்ணக்
கரம்படைத்து மீயக் கருதாய்—பரம்பரனை
யெங்ஙனடைந்திடுவா யென்பெற்றாய் செல்வத்தை
யிங்ஙனே யன்னமிட வெண். (உ௦)

என்ன தவஞ்செய்தோ விப்பொருளைப் பெற்றோமென்
றுன்னிப் பிறிது முயர்வெய்த—மன்னு
முயிர்போலப் பொன்னை யுவந்துகர வாமற்
செயிர்தீ ரனதானஞ் செய். (உக)

நாளை யறம்புரிவ நாளை தவஞ் செய்வமென
நாளைவீ ணாக்காதே நன்னெஞ்சே—நாளைநா
ணந்நாளோ வன்றி நமனாளோ நீயுணரா
யிந்நாளே யீவதனுக் கெண். (உஉ)

அருளினமன் றாத சருளிலுனைப் பற்ற
மருளுருவங் கொண்டு வருவா—ரருளற்றே
யற்றவர்க ளுண்ண வனமீந் தரனருளாற்
பற்றகன் றுய்ந்திடவே பார். (உ௩)

செத்த பிறகுநீ சேர்த்துவைத்த பொய்ப்பொருளை
யுத்தமமா நல்லறத்தி லுய்ப்பரோ—புத்திகெட்டுக்
கள்ளுஞ்சூ தோடு கபடவிலை மாதருக்குந்
தள்ளுவரோ யாதோ தமர். (உ௪)

உண்ணா துடுத்திடா தோரறமுஞ் செய்திடா
தெண்ணா தனவெண்ணி யிப்பணத்தைக்—கண்ணினாற்
பார்த்திருந்தா லென்ன பயனும் பசித்துடலம்
வேர்த்துவந்தார்க் கீய விரும்பு. (உ௫)

மானிடரா யுற்று மிருகம் போலிருந்தான்
மானிடர்கா மாவமோ மண்ணுலகின்—மானிடரா
வானதனுக் கேற்ப வறமநந்தஞ் செய்ததனான்
ஞானதனுப் பெற்றிடலே நன்று. (உ௬)

இருந்தாற்போ லிவ்வுடல மேதுமந்தோ நெஞ்சே
விருந்தினர்வந் தால்வெறுக்க வேண்டாம்—விருந்தினரை
யாரென்று பார்த்தா யரனன்றோ மோகமற்றுப்
பாரொன்று நல்லறத்தைப் பற்று. (உ௭)

செழும்புனலிற் றேரை செழித்துவாழ்ந் தாலும்
வழும்பறு வாறுகீழ் மக்கள்—செழும்பொன்னோ
டுற்றாலும் லோபமறா ருமரிவ ரேன்பிறந்தார்
பற்றியன யீவதுவே பண்பு. (உ௮)

இறப்பதுண்மை யென்றே யெளியோர் தமர்க்கு
மறப்பின்றி யிட்டுண்டு வாழ்வார்—மறப்பற்றுப்
பண்டைமறை போற்றும் பரவடிவைத் தம்முளத்திற்
கொண்டுசீ ராவார் குறித்து. (உ௯)

அறம்புரிவா ரீச னடியடைவ துண்மை
யறமாவ தீதலே யாமித்—திறமுணர்த்த
யன்னமே யீந்தா ளறநா யகியிதனை
மன்னுயிர்போற் கொண்ணீ மதித்து. (௩0)

அழிசெல்வத் தாற்செருக்குற் றற்றூர்க டம்மை
யிழிசொல்லா லேசாதி ரென்று—மழிபொருளாற்
கெட்டவர்கள் கோடி கெடுமதியாற் பல்பிறப்பிற்
பட்டவர்க ளெண்ணிநெஞ்சே பார். (௩௧)

அன்னதான விளக்கம்.

ஏழைகளைக் கண்டா லிரங்கி யிசைந்தமட்டுங்
கோழைமன மின்றிக் கொடுப்பாயே—லூழைக்
கெடுத்தகற்றி யீசன்றன் கிஞ்சுகப்பொற் பாதத்
தடுத்திடவே செய்வா னறி. (க. உ.)

வேதஞ்சொன் மார்க்கம் விளம்புமிடத் தப்பலவாம்
வேதத்தா னூட்டல் விளக்காகும்—கோதகல
வேழைக்கூ ணீவார்க் கிரும்பதவி தந்துபிரா
னூழையற வேயொழிப்பா னோர். (க. ங.)

அன்னதா னத்தா லடையலா நற்சிவத்தை
யன்னதுசெய் யாதா ரடைதலிலை—சொன்னேன்
சிவமறிய முக்காலுஞ் சிற்றுரையென் றெள்ளீர்
பவமறுத்தற் சோறிடலின் பண்பு. (க. ௪)

பன்னுதா னத்துட் பரமதா னந்தாயோ
ரன்னதா னம்மென் றறைந்திட்டா—ரன்னதனை
மேற்கொண்டு செய்திடுவார் மேலாம் பதமடைவ
ரேற்குமா றெல்லா மியைந்து. (க. ரு)

அன்னமிட்டு மாறனா ரானைக் கதிபெற்றா
ரன்னமிடும் புண்ணியத்தை யாரறிவார்—பன்னரிய
புண்ணியத்துட் புண்ணியம் பெற்றவர்கள் புற்கையது
தண்மையுட னீந்தவர்க டாம். (க. சா)

நம்பொருணம் பூமிமனை நம்மக்க ளென்றுநம்பி
வம்புவழக் கிற்கே வழிவகுத்தி—டம்பச்
செலவிட்டுக் கெட்டாய் சிரிக்கின்ற நாயே
செலவிட் டனதானஞ் செய். (க. எ)

தருமநூ லெல்லாந் தவறாது கற்றுந்
தருமஞ்செய் தற்கேன் றளர்ந்தாய்—தருமநூல்
கற்றாய் கடைபரப்பிக் காலற் குடல்வளர்க்கப்
பெற்றாயீ தாலென்ன பேறு. (க. அ)

பிச்சையிடா துண்ணுமனம் பேசுமி டத்தனிடம்
பிச்சையிட் டுண்ணன்னம் பேரமுதம்—பிச்சையிடக்
கல்லாது நூல்கள் கடைபோகக் கற்பார்க
ணல்லவரோ தீயவரோ நாடு. (க. கூ)

புண்ணியத்தால் வந்த பொருளைப் புதைத்துவைத்
தெண்ணித் துயர்கொள்ளு மென்மனமே—கண்கெட்டுப்
புத்தியற்று யந்தோ புதைத்தபொருள் யார்க்குதவு
மெத்திறத்து மன்னமிட வெண். (சo)

வாழ்வா வதுமாய மென்றுரைத்த நல்லோர்சொ
லாழ்வினையா லேயறியா தோகெடுவா—யாழ்ந்தறியா
நாறுடலுக் கூட்டிவரு னன்றன்று நல்லார்போற்
பேறுறுதற் காமோ பிறகு. (சக)

பணமில்லார் பிச்சையிடப் பார்ப்பாரெந் நாளும்
பணமுள்ளா ரெப்பயனும் பாரார்—பணமுள்ளா
ரற்றவருக் கீந்திங் கானடியைப் பூசித்துக்
கற்றவர்க்கு மீதல் கனம். (சஉ)

வரும்பணத்தை யைம்புலத்தும் வாய்ப்பா வழங்கி
வரும்பிறவி மாற்ற மதியா—தரும்பிறவி
பெற்றும்பா ழாதல் பெருமையோ வென்னெஞ்சே
யெற்றுக் கிருக்கின்று யிங்கு. (சஙு)

அன்ன மளிப்போர்க் ககிலமனைத் துஞ்சொந்த
மன்னமி டார்க்கெதுவு மன்னியமா—முன்னின்று
தன்னை யறிந்தவர்க டாழ்ந்தோர்க்கிங் கன்னமிட்டோ
ருன்னிதனை யென்னெஞ்சே யோர்ந்து. (சச)

பசித்தவர்கட் கன்னமிட்டார் பார்புகழ வாழ்வார்
பசித்தவர்க ளுய்போலப் பார்க்கப்—புசித்துறங்கி
யெள்ளளவே னுங்கருணை யில்லாதா ரேன்பிறந்தார்
தள்ளுவரோ தம்பழியைத் தாம். (சரு)

அன்னமிடு வார்பூ ணரன்வேட நன்றுகு
மன்னமிடார்க்கமேலுக் கழகாகத்—துன்ன
வணிசிவசின் னங்க ளழிபிணமீ திட்ட
பணிகர்க்கு நெஞ்சேநீ பார். (சசு)

சாந்தகுண சீலரைப்போற் சாதிப்பார் வேதாந்தஞ்
சாந்தகுணஞ் சொல்வார்கள் சாதமிடார்—சாந்தமுளார்
சத்தொன்று நெஞ்சுக் களர்நடையுங் கொண்டுதினம்
பத்தர்க் களமிடுவர் பார்த்து. (சஎ)

குளித்தாசா ரத்தழுந்திக் கும்பிடுவா ரன்பா
யளித்துண்ணு வஞ்சகங்கொ ளற்ப—ரளிக்க
மனமில்லா மக்கடா மாமரமற் றென்னே
தினங்கழித லென்பயனுஞ் செப்பு. (சஅ)

நாய்க்குவைக்கும் பேர்போல நற்பட்டம் வைத்திருப்பர்
நாய்க்குங் கடையா நடையுடையார்—வாய்த்தவா
றன்னமிடா துண்ணுமிவ ரார்க்கா விருக்கின்றா
ரென்ன பயன்பெறுவா ரேய்ந்து. (சகூ)

நாய்க்குள்ள புத்தியுமி னுயிற் கடைமனமே
வாய்வளப்பங் காட்டி வழிவிடுவாய்—பேய்க்குணத்தைக்
கொண்டலைந்து தேடுபொருள் கூடவரு மோசொல்வாய்
கண்டறிந் தன்னமிடக் கல். (ருo)

சோறுசோ றென்றுதினஞ் சோர்வார்க்குச் சோறிடலே
பேறுபே றென்றுமறை பேசுவதாற்—கூறுகூ
ருக்கண் டனதான மன்பாகச் செய்நெஞ்சே
மாக்கதியைச் சேர மகிழ்ந்து. (ருக)

அய்யோ வுயிர்த்தான மன்பாகச் செய்யாம
னய்யா திருக்கநீ நாடுகின்றாய்—பொய்யுடம்பு
நய்யா திருக்குமோ நன்றிகெட்ட கீழ்மனமே
பொய்யா மொழிப்பொருளைப் போற்று. (ருஉ)

அன்னமிடு மில்லத்தி லன்பருற நெஞ்சுகப்பா
ரென்னவிட ருற்றாலு மேகிடுமோ—வன்ன
மிடாரகத்தி லென்று மிடும்பை வசிக்கும்
விடாதுவசை சேரும் விரைந்து. (ருங)

அன்னமிடக் கல்லாதா ராதிமறை யோதியென்னுஞ்
சொன்ன மறைப்பயனைத் துன்னலின்றா—மன்னமிடு
வாரகத்திற் கள்ளர் வருவதிலை யீதுண்மை
சீரகத்தைச் சேர்வார் தெளிந்து. (ருச)

பசியாற்றும் பத்தரிடம் பற்றற்றான் றன்வந்
தசிபதத்தி னுண்மை யறைந்து—சிவவடிவைக்
காட்டி யருளிக் கடைப்பிறப்பை நீறாக்கும்
வாட்டுமோ வல்வினைகள் வந்து. (ருரு)

பற்றற்ற ரேழைகடம் பாழ்ப்பசியை நீக்குகின்றார்
கற்றில்லில் வாழுங் கழிசெல்வர்—நற்றவமா
வன்னதா னஞ்செய்யா தந்தோ கெடுகின்ற
ரின்னலடை யாதிருப்ப தெங்கு. (ருசு)

பரனடியார் பாதப் பரிசத்தாற் பாவம்
விரைவி லகலுமெனும் வேதம்—பரன்ற
னடியா ருருவமெடுத் தன்னமிடென் றேற்பான்
கடியா தளியின் கசிந்து. (ருஎ)

அன்னமி டாதார்க் கடுத்தடுத்துத் தீங்குவரு
மென்னபொரு ளுற்றாலு மின்பமுறா—ரன்னம்
பசித்தோருக் கீயாதார் பாழாம் பணந்தான்
வசிக்கார கங்காட்டும் வாய்ந்து. (ருஅ)

வேதமொடு நீதி விகற்பமறக் கற்றிருந்துஞ்
சாதமிடக் கல்லாச் சதிகாரப்—பாதகர்தாங்
கோதில்வாக் குள்ளாராய்க் கூறுகின்றார் சன்மார்க்க
மேதிவர்க்கு வந்துதவு மெய்ந்து. (ருகூ)

தம்பொருளை யீயாமற் றவென்றேற் றன்னியர்பா
றம்பொருளைப் போற்றருமந் தாஞ்செய்யும்—வம்புடையா
ரென்பெறுவா ரந்தோ விதமவர்க்குண் டாகுமோ
பொன்னெஞ்சே யன்னமிடப் போ. (சுய)

உடல்பொய்யா மென்றுணர்ந்தா ருற்றபொரு டன்னை
விடல்வேண்டு மென்று விரைந்து—கடல்போல
வன்னதா னஞ்செய்யு மன்பருடன் கூடிநின்று
சொன்னவறஞ் செய்வார் துணிந்து. (சுக)

எண்ணிப் படிக்கின்ற ரேழைகளை யேமாற்ற
வண்ணமா நூலை வகைவகையாத்—தண்மையிலா
ரன்னதா னஞ்செய்வா ரன்றி னெறிசெல்வர்
பன்னுநயங் காண்பார் பரிந்து. (சுஉ)

அருள்வடிவ மானவரை யான்றோரென் றன்று
திருண்மனைத்தார் குற்ற மிசைப்பா—ரருள்வடிவ
மானோர்க் கடையாள மன்னதா னஞ்செய்த
லானா ரதுசெய்யா ரோர்ந்து. (சுஙு)

அறத்தான் மறந்தேயு மாமெனுஞ்சொற் றேர்வாய்
திறத்தான் மறஞ்செய்யுந் தீயோ—யறத்தாறு
நின்றனதா னஞ்செய்வாய் நின்பிறப்பு நன்றாகும்
பொன்றுங்கா றுன்பனடயாய் போற்று. (௬௪)

இட்டாருக் கிட்டபல னென்னு மொழியுன்னிச்
சட்டை யகன்முனன தானஞ்செய்—யட்ட
வவதான மென்செய்யு மாக்கைவிழும் போது
பவமகல நல்லறத்தைப் பற்று. (௬௫)

அரன்பூசைக் கான வலர்பலவுண் டானு
லான்றான் விரும்புமல ரன்னம்—வரமாகு
மன்னமல ரின்பெருமை யாய்ந்தனதா னந்தன்னைச்
சென்மமறத் தீயோனே செய் (௬௬)

பலமலரி னர்ச்சனையாற் பாறாது பாவ
மலம்போக் கலரன்ன மாகும்—பலபலவாக்
கற்பித் தருச்சிப்பார் காய்பசிக்கின் கன்னமிடா
வற்பர்செய் பூசையிலென் னாம். (௬௭)

அன்ன மலரா லடியாரை யர்ச்சிக்கி
லென்ன வினையு மிரிந்தோடுஞ்—சொன்னேனுன்
முக்கா லு மானையிதா மூதறிவோர் கொள்கையிதா
மெக்கா லு மிட்டுணநெஞ் சேண். (௬௮)

அன்ன மலரை யறையு மறைமுதன்மற்
றென்ன மலரு மிதற்கொவ்வா—தன்னமலர்
கொண்டன்பர் போற்றுங் குணம்படைத்து நிற்பார்சீர்
கொண்டுளத்திற் போற்றிடுமே கு. (௬௯)

சொற்பதமீ யாதந்தோ சோர்வுற்று ரெண்ணிறந்தோர்
கற்பனையா மென்றுலகைக் காணும—லற்புதமா
மிவ்வுடம்பு மூப்பாமு னேழைநெஞ்சே யன்னவறஞ்
செவ்வியதாச் செய்திடநீ தேர். (௭௦)

அன்னமிடார் தங்கட் கடையாள முண்டுபல
வன்னமிலா தாடையணி யற்றவராய்ப்—பன்னாட்
பசிதணியா தேங்கிப் பரிதபித்துப் பாரிற்
கசிவினர கந்துறுவார் காண். (௭௧)

இளைத்துவந்த வேழைகளைக் காயா தழைத்திங்
கிளைத்த முகம்பார்த் தினிதாய்க்—களைப்பகல
நீரன்ன மாயிடினு நீயளிப்பா யேனெஞ்சே
யீரனென்னும் பல்லுலகு மேய்ந்து. (௭௨)

அன்ன மயமே யனைத்துயிரு மென்றிடலா
லன்னப் பெருமைதனை யாருரைப்பா—ரன்னமதே
யாணுருவம் பெண்ணுருவ மாகிவினை யாடுமிதைக்
காணுமதி யோருரைப்பார் காண். (௭௩)

நாடரிய நீதிகளை நன்றுப்போ திப்பதனாற்
றேடரிய ஞானபது சேராது—நாடறிய
வன்னமிடி லற்றவர்கட் கக்கணமே ஞானமுறுஞ்
சொன்னே னுளவறிந்து சூழ்ந்து. (௭௪)

அன்னமிடா ரோதியென மாகமபு ராணங்க
ளன்ன மிடலவற்றை யாய்ந்தபல—னன்ன
படித்தாலும் பாழே பரன்வேடந் தாங்கி
நடித்தாலு நன்மையில்லை நாடு. (௭௫)

கருணைசிறி தேனுமிலார் கற்றதனா லென்னாங்
கருணையுளார் கற்றாற் கவினாங்—கருணையுளா
ரெவ்வுலகு மாய்நின்ற வீசனென நல்லோர்கள்
செவ்வையுறக் கூறுவார் தேர்ந்து. (௭௬)

வந்த பொருளை வரையறுத்துப் பங்கிட்டுப்
பந்தமிலார்க் கன்னம் பணிந்தீயிற்—றந்தபொரு
ளொன்றுபல வாயிரமா யோங்குமென நூலறையு
மென்றுந் துணையா மிது. (௭௭)

வருவாயிற் பாவமது வந்தணுகு மென்றே
வருவாயிற் சோற்றை வறியோர்க்—குருசியுட
னிட்டுண்டா லப்பாவ மேகுநல் லின்பமுறுங்
கட்டுண்ணார் தீப்பிறப்பிற் காண். (௭௮)

தன்பொருளா லன்னமிடான் றக்க பொருளிருந்து
மன்னியர்பாற் பொன்னேற் றறஞ்செய்வா—னன்னயமில்
பாவிகளிற் பாவி பசித்தழுவான் பின்னெளி
லேவினதைச் செய்வா னிசைந்து. (௭௯)

பணமிருந்தாற் பாவம் பதியு மதனாற்
பணமுடையார்ப் பார்க்கப் பயமாங்—குணமாப்
பணமுடையார் பத்தருக்குப் பாத்திட்டுப் போற்றில்
மணமுடையா ராவர் மகிழ்ந்து. (௮௦)

அன்னக் களைபட்ட வாருமிலா வேழைகளை
யுன்னிநீ யாரென்று மோராமல்—பன்னாள்
பழகினார் போலப் பதமிட்டுக் காத்தா
லழகென்ப ரம்மையப்ப ரார்ந்து. (௮௧)

உணவிட்ட வுத்தமர்தா மூதியமோ டிங்குப்
பணமுடையா ரென்று பகர்வா—ருணவிடுவீர்
செல்வநில்லா தெப்போதுஞ் சேர்ப்பதென்று புண்ணியத்தை
யெல்லவர்க்கு மீகைதுணை யெண். (௮௨)

இட்டுண்ணாச் சம்பத் திழிசெலவுக் காங்கைக்கு
மெட்டிமர மொப்பரவ ரென்னுவீ—ரிட்டமுடன்
முன்னன்ன மிட்ட முறைமையால் வந்ததென
வுன்னியன்ன மேயிடுவீ ரோர்ந்து. (௮௩)

நோயுடம்பை நம்பாதீர் நொந்தவர்க்குச் சோறிடுமின்
வாயினிக்கப் பேசின் வயிறுறு—மாயுடம்பை
நம்பியறஞ் செய்யீரே னைசமுறு வீர்திண்ண
மெம்பிரான் றன்னாணை யே. (௮௪)

அழுதழு தன்ப ரரனடியைப் பெற்றார்
பழுதி லடிபெறநாம் பார்க்கின்—வழுவமெனச்
சொல்லா லளக்காமற் சோறிட்டா லேழைகளுக்
கெல்லாச்சம் பத்துமுறு மிங்கு. (௮௫)

அழிபொருளைச் சொந்தமென வாழ்ந்துமகிழ் கொள்வீ
ரிழிவோ வறத்தா றியம்பீர்—கழிபொருளை
யுண்ணினைந்து பார்ப்பதுபோ லுண்டியிட்டுப் பார்ப்பீரேல்
புண்ணியமே நற்பணமாய்ப் போம். (௮௬)

அன்னமிட்டார் பொன்னடியை யாசையுட னென்றலையிற்
பன்னாள் சுமந்திடவே பட்சமுண்டு—பன்னா
ளுடம்பிருக்கா தாதலினா லுள்ளமட்டு மன்னா
ரடிமலரைத் தாழ்வே னறிந்து. (௮௭)

சோறிட்டார் பெற்றபலன் சொல்லரிதா மாராலுஞ்
சோறிட்டுக் காட்டற்கே துய்யநந்தி—மாறி
வசவண்ண னென்றுலகில் வந்துவாழ்ந் தென்று
மசனமிட்டா ரன்புடையார்க் கார்ந்து. (௮௮)

பண்ணு லிருக்குமெனப் பாராதே யிவ்வுடம்பு
சின்னாட்பன் னாளாமோ சீரழிவாய்—முன்னாளி
லன்னமிட்டுச் செல்வ மதிகமாய்ப் பெற்றிருந்து
மன்னமிடா தேனோ வறை. (௮௯)

எத்தானத் தானு மிளகாத விம்மனந்தான்
பத்தருணு மூணாற் பளிங்கிணைப்போற்—சுத்தமுறு
முத்தருக்காட் பட்டிருக்கு முன்வினையுந் தீர்ந்தொழியுஞ்
சத்தியஞ் சத்தியமே தான். (௯௦)

இட்டுண்ணு மன்பர்த மில்லி னடுநிசியிற்
கெட்டுநொந்து வந்தவர்க்குக் கேடிலனை—யிட்டே
யிருக்கவிடங் காட்டி னினிப்பிறக்கத் தாயின்
கருக்காட்டாக் காட்டுங் கதி. (௯௧)

எல்லாப் பொருடமையு மேழைகளுக் கிட்டிளையா
மல்லார் கருணையொடும் வாழ்ந்தவரா—ரெல்லா
ரிளையான் குடிமாற னின்னுன் குணங்கொண்
டிளையா தமுதளிப்பா யே. (௯௨)

நாவாற் பெரிய நயமில்லா வேழைவந்து
காவா யெனையென்று கால்பணிந்தா—லோவாது
யார்நீபோ வென்றதட்டி யஞ்சவசைச் சொற்கூறிச்
சீர்குலைவார் மக்களோ செப்பு. (௯௩)

படிப்பினாற் பண்டிதராய்ப் பார்புகழப் பெற்றுக்
படிப்பிற் குறையே பகர்வ—ரடிசிலிடார்
நீதிகளைச் சொன்னாலு நீசப் பணப்பேயர்
காதுகளா லேற்பாரோ காண். (௯௪)

பணப்பித்துக் கொண்டவர்க்குப் பற்பலசொற் றாலும்
பணப்பித்தா னன்றைப் பழிப்ப—ருணர்வூட்டும்
வித்தையெலா மெம்முன்னே வேகாது வாய்மோகக்
கத்தாதே போவென்பர் காண். (௯௫)

பணிற்கா தேழைகட்குப் பாத்திடுமி னென்றால்
பணவாசை யுள்ளார் பரிந்திங்—குணவிட்டுக்
கண்டதென்ன போவென்று கண்டிப்பா ரென்கண்டார்
கண்டதென்ன லாமேவன் கண். (கூசு)

பணமே பரமென்று பல்காலு மேத்திக்
கணமும் பிரியாது காப்பர்—பணமதையே
யெண்ணியெண்ணிப் பார்த்தென்று மேகா திதுவென்று
பண்ணு ரறமொன்றும் பார். (கூஎ)

சத்தியமாத் தன்னைத் தரிசித்த வுத்தமர்கள்
சத்தியமா வேழைகளைத் தாங்காப்பார்—சத்தியமா
வெவ்வுயிருந் தாமாக வெவ்வமறக் கண்டதுண்டேல்
கவ்வையறச் சோறிடுவார் காண். (கூஅ)

சத்தியனுத் தன்னைத் தற்காத்தல் தர்மமென்பார்
சத்தியந்தான் யாதென்று சாற்றென்றால்—சத்தியர்போ
லுத்திக்கு மாறு வுளறி மனமகிழ்வார்
பத்தியிலாப் பாமரர்தாம் பார். (கூகூ)

அன்னமிடார் சேம மறியு மானுணை
யன்னமிட்டார் சத்தியத்தை யாய்ந்தவர்க—ளன்னமிடற்
கென்ன நிகராகு மேதுரைப்பி ரன்னமற்றால்
சொன்னவுல குண்டாமோ சொல். (க00)

அன்னமிடக் கற்றவரே கற்றவர்க ளற்றவருக்
கன்னமிடார் கற்றதனு லாம்பயனென்—பன்னாள்
படித்துப் பலர்க்குரைத்தும் பாங்கில்லை காணீர்
நடிக்காதீர் கற்றவர்போ னன்கு. (க0க)

படிப்பென்ன செய்யும் பணக்காரப் பண்பீர்
படிப்பறுக்கா தேழைப் பசியைப்—படித்ததனாற்
கத்தனடி கண்டதுபோற் காட்டுவீர் வேடத்தாற்
சத்துடைய வன்னமிடர் சார்ந்து. (க0உ)

பணமும் படிப்பும் பரனருளாற் பெற்றும்
பணத்தை மறைத்துப் படிப்பீர்—பணக்காரப்
பண்டிதரே நீங்கள் பதுங்கி னறஞ்செய்யச்
சண்டிகளென் செய்வார்க டாம். (க0௩

பண்டிதப்பேர் பெற்றதனாற் பாவமறு பண்டிதரே
பண்டிதப்பேர் யாரைப் பகட்டுதற்குப்—பண்டிதரே
கல்வி செல்வ முற்றுங் கடும்பசிக்கி டாமலாட்
கொல்லியிலென் பெற்றீர் குணம்.   (கoச)

புண்ணியத்தாற் செல்வம் பொருந்தியதென் றேயறிந்தும்
புண்ணியஞ்செய் யாமனுள் போக்குவதேன்—புண்ணியத்தாற்
கல்வியு நற்பொருளுங் கம்பீர மாப்பெற்று
மில்லையென் றேசொலுவ தென்.   (கoரு)

ஏழைக் கிரங்குவார்க் கேயிரங்கு மென்சிவன்று
னேழைக் கிரங்கார்க் கிரங்குவனோ—கோழை
யடைத்துயிர்தாம் போமு னறஞ்செய்வீ ரன்பாய்
விடைப்பாகன் வீடளிப்பான் மேல்.   (கoசு)

பத்திக்கு வித்தாம் வசவர் பரங்கட்குச்
சித்த மகிழ்ந்து திருவெல்லா—மெத்த
வடிசிலிட்டுக் காட்டி யகமகிழ்ந்தார் முன்னம்
மடிவிட் டிதுசெய்வாய் வந்து.   (கoஎ)

அன்னமுட னூனுண் டடியர்வே டம்பூண்டோ
ரென்ன வுரைத்தா லுமேற்காம—லன்னவரை
நாய்போன் மதித்தனுவு நல்காதே நல்லன்பர்க்
காய்போ லமுதளியன் பால்.   (கoஅ)

நினைவில் விளங்குபொரு ணித்தியமென் றெண்ணேல்
கனவொக்கு முட்கண்ணுற் கண்டா—னினைவு
கனவென்று நீகண்டாற் காண்பவைகள் யாவு
மனமயக் கென்றளிப்பாய் மற்று.   (கoகூ)

மனத்தால் விளைகின்ற மாறுப் பிறவி
மனத்தை யறிந்தவர்பான் மன்னு—மனத்தை
யறிந்தார் மயக்கிற்கு ளாழாம லன்னம்
வறியார்க் கிடுவார் மகிழ்ந்து.   (கக0)

மோகாதி யல்லலிலே மூழ்கிக் கிடந்தையோ
தேகாதி யுண்மையெனத் தேர்ந்தோநாம்—போகாதி
துன்பஞ் சுகமென்று தோன்றுமட்டு மேழைகளா
மன்பதைகட் கூட்டோ மகிழ்ந்து.   (கக்க)

அன்பின் பெருக்கதனா லாதிசிவன் வைகுமிட
முன்னியறி யாதுவெள்ளி யோங்கலென்பா—ரன்னதைக்
டன்புடையாய் வேறாக வையமுறா தையனிட [கேட்
மன்னமலை யென்றே யறி. (௧௧௨)

முன்னாளி லீசன் முளரித்தாள் போற்றியதா
லின்னாளி லீசனிடம் யாதென்றே—யன்னமிடு
மன்பர்பாற் கேட்க வரன்றா னிருக்குமிட
மன்னமலை யென்றார்க ளாய்ந்து. (௧௧௩)

வெள்ளி மலைமேல் விளங்குஞ் சிவமென்பார்
துள்ளுமன தென்போற் றுறக்காதார்—வள்ளலா
னன்னமலை மீதே யமர்ந்திருப்பா னாதலினா
லன்னமலை வார்க்கே யளி. (௧௧௪)

வட்டிக்கு வட்டியென வாங்கி முதலாக்கி
ரட்டிப்பாய்ச் சேர்ப்பாய் நயந்தன்ன—மிட்டுண்ணா
தோங்கக் குவித்துவைக்கு முன்னைப் பாழ்ம்பணந்தா
னேங்கியழ வைக்குமுண்மை யெண். (௧௧௫)

வட்டி யதிகமாய் வாங்காதீர் வாங்குவிரேல்
நட்டி யதிகமாய் நண்ணிடுவீர்—வட்டியற்பம்
பெற்றிடினு மன்னம் பிறர்க்கிட் டுவப்பீரேல்
பெற்றிடுவீர் நன்முத்திப் பேறு. (௧௧௬)

ஏழையிடம் வட்டி யிரக்கமின்றி வாங்கிடுவார்
கோழை சளிசிந்துக் கொல்கொலெனப்—பீழைசெயு
மீளைநோய் கொண்டெடுப்பார்க் கேக்கற்று வாடியே
யூளையிட்டே வீவா ருருண்டு. (௧௧௭)

பணத்தி லழுந்திப் பரிதபிக்கு நெஞ்சே
பணத்தைவிட்டுச் செத்தாற் பகைத்துப்—பணத்தைப்
பிணமீது கொட்டுவரோ பேதமைவிட் டேழைக்
குணவீந் துறுதியுற வோர். (௧௧௮)

நனவில் கனவி னயந்து பணத்தைத்
தினமுஞ்சிந் தித்துத் திளைக்கின்—மனமேநீ
யந்தமிலான் பொன்னடிக்கிங் காளாகி வாதைசெயும்
பந்தமறுத் துய்வதெப்போ பார். (௧௧௯)

சார்குந் தருணத்திற் சாற்றென்றால் வாசகத்தை
யேகுமோ காதி லிருளகலச்—சாகுமுட
னுற்றிருக்கும் போதனமீந் தோதுதிரு வாசகத்தைச்
சிற்றம் பலவனருள் சேர். (கஉ0)

மூன்பு ததீசி முனிமுன்பின் பாராம
லென்பளித் துப்பெருமை யேற்றான்மெய்—யன்பர்
பிடியன்ன மிட்டுப் பெருமைபெற்றா ரீதிற்
படியினுயர் வானதெது பார் (கஉக)

பருத்த தலையணைக்குப் பஞ்சிடலே போல
வொருத்தனுச் செவ்வனே யுண்டு—பருத்த
வொதிமரம்போ லானு யுறுமிடியோர்க் கூட்ட
விதிகிழியா முன்னம் விரும்பு. (கஉஉ)

கூற்றிருந்துஞ் செல்வங் கரத்திருந்து மின்பநலப்
பற்றிருந்து மேழைகளைப் பாரார்—பற்றின்
மனிதரென வந்து மரப்பாவை போல்வார்
கனிவொடன மீயக் கனிந்து (கஉ௩)

செல்வமிரண் டெம்படைத்துந் தீனர்பா லன்பென்ப
தில்லையத னாலன்ன மீயாமற்—செல்வ
மிடிக்கிலைத் தேமாப்புற் றேகலினு மென்று
மிடிக்கிரையந் தார்க்கிடலே மேல். (கஉ௪)

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டி யபிநயித்துக் கன்மனத்தா—லேட்டிலுள்ள
வித்தையெலாங் காட்டி வெறும்வாயாற் பந்தலிட்
டெத்தா தனமிடவே யெண். (கஉ௫)

அடியர்நா னென்பா ரறிவணுவு மில்லார்
மிடியருக் கன்னமிட மேவார்—குடியரைப்போற்
கொள்ளைகொள்ளை யாய்ப்பேசிக் கும்பிட்டிங் கேத்திடுவா
ரெள்ளளவே னும்பயனங் கேது. (கஉ௬)

உள்ளத் தொளிர்சிவத்தை யோராம லூரூராய்
வள்ளலினைத் தேடி வருந்துவா—ருள்ளம்போ
லள்ளக் குறையாத வாஸ்தியுற்று மன்னமிடா
ருள்ளபொரு ளாற்பயனென் னேது. (கஉ௭)

நாலைமுதன் மாலைவரை கால்கடுக்க வேயலைவார்
பாலை நிலம்புகுந்த பட்சியைப்போற்—கோலைப்
பிடிக்களவுந் துக்கமுற்றுப் பேராசை யுற்றூற்
பிடிச்சோ றிடுவதென்று பேசு. (௧௨௮)

சங்கையறக் கற்றாலுஞ் சந்தகுணம் பெற்றாலும்
பங்கமற விட்டுண்ணாப் பாமரமே—துங்கமறை
நல்க வுரைத்திருக்கு ஞாயந் தனையுணர்ந்து
செல்காமு னன்னமிடற் சீர். (௧௨௯)

வீட்டிற் கழகு விருந்தினருக் கிட்டுண்ணல்
பாட்டிற் கழகினிய பண்ணாகு—நாட்டமுறு
ஞானந் தனக்கழகு நற்சாந்தி யன்னமிட
றானந் தனக்கழகு தான். (௧௩௦)

விரைத்தமுளை நெல்லெடுத்து வீழரிசி யாக்கி
யளையிரவில் வந்தவாற் கார—விரைவா
விளையான் குடிமாற ரின்பொடமு தீந்தா
ரிளையா திளைத்தவர்கட் கீ. (௧௩௧)

இளையா தெவர்க்குமன மிட்டே யிளைத்த
விளையான் குடிமாற ரில்லிற்—களையான
பாதி யிரவிற் பாற்கமுதீந் தாய்ந்தமைநோக்
கேதிலருக் கன்னமிட வெண். (௧௩௨)

நேசரென வந்தோர் நெடுங்காலங் காத்திருக்கப்
பாசமுளார் போலப் பசப்பியே—நேசநீர்
வந்துநெடு நாழி வறிதிருந்தீ ரில்லென்னு
மந்தகனே யன்னமிட வாய். (௧௩௩)

காணவந்த நட்பினரைக் காக்கவைத் தன்னமிடா
தாணமுறப் பேசி யழகாகக்—கோணமனம்
போய்வருவீ ரென்றுரைத்துப் பொற்பாக வுண்டுவக்கும்
பேய்மகனே யன்னமிடப் பேண். (௧௩௪)

சிநேகரெனப் பல்லிடத்துஞ் செப்புகின்ற செல்வர்
சிநேகரோர் கால்வந்தாற் சிந்தித்—தநேகமா
நல்வார்த்தை கூறியே நட்பினரைச் சென்மினென்பார்
கல்லொத்த நெஞ்சத்தார் காண். (௧௩௫)

இல்லத் திருந்து மியற்றுரே யில்லறத்தை
யில்லமஃ தாகா திடுகொடாஞ்—செல்வரே
யென்சொல்வீ ரீதுக் கெடுத்துரைமின் ஞாயமுண்டேல்
வன்சொ லுடன் வம்பகற்றி வந்து. (௧௩௬)

ஆரு மனவிருத்தி யன்னமிடி லேழைகளுக்
கூருமுற வாகுமிவ் வுண்மைதனைச்—சீருற்ற
வாரணங்க ளாகமங்க ளத்தனருள் கீதையுமே
பூரணமாச் சொல்லும் புகழ்ந்து. (௧௩௭)

கல்விசெல்வப் பாசத்தாற் கட்டுண்டு கண்ணின்றிப்
பல்லளற்றி லுற்றந்தோ பாழாவான்—பொல்லா
வரவக் கொடிமன்ன னாகலினு லன்ன
மிரவலருக் கீந்துய்ய வெண். (௧௩௮)

அடும்பொருளை வேண்டி யலைகின்று யந்தோ
கொடும்பிறப்பை யெவ்வாறு கொல்வாய்—நடுநிலையைப்
பெற்றுய்ய வேண்டினெஞ்சே பேறைகளுக் கன்னமிடக்
கற்றிடுவாய் நாளுங் கசிந்து. (௧௩௯)

வேசி மனமும் வெறுக்கையோன் றன்மனமுங்
காசி தனமே கருதுதல்போ—லாசி
லருளுடையார் நாளு மனமெளியோர்க் கீயக்
கருதிடுவா ரென்றே கழறு. (௧௪௦)

வேண்டியபோ தெல்லாம் விதம்விதமா வுண்டாலும்
வேண்டியுன்பால் வந்தவர்க்கு வெட்டிச்சோ—றுண்டகையே
யிட்டாலும் புண்ணியமே யெய்துநீ மாறுமற்
றிட்டவழி யீதேனுந் தேர். (௧௪௧)

அண்டைவீட் டுச்சடங்கி லானமட்டுங் கைநீட்டிக்
கொண்டவற்கு மற்றுமுன் கும்பலுக்குந்—தண்டச்சோ
றிட்டிட்டுப் பேரெடுக்க மேந்திழையுன் சோறுபிடி
யிட்டிடலே யேற்பார்க் கிதம். (௧௪௨)

இலக்கணவி லக்கியங்க ளென்னுஞ்சோற் றின்முன்
மலக்குடல்யா னென்ன மகிழ்வா—யிலக்கணத்தைக்
கற்றூர்க் கழகு கனவன தா னஞ்செய்த
லற்றூர்க் குணவீ யறிந்து (௧௪௩)

பெண்பிள்ளை கட்குப் பெரும்பொருளை யீட்டிவைத்திங்
கண்டிவந்த வேழைகளுக் கன்னமிடாய்—பெண்பிள்ளை
சந்ததியினிற் கூட்டமெனச் சார்ந்துவரு மேழைகட்குப்
பந்தமற வன்னமிடப் பார். (௧௪௪)

குடும்பம்பொய்க் கூட்டமெனக் கொள்ளறிஞ ரென்று
மிடும்பை தரும்பிறவி யெய்தார்—குடும்பத்தை
மெய்யென்று நம்பி மெலிந்தோர்க் கனமளியார்
நொய்ய பிறப்புறுவார் நொந்து. (௧௪௫)

பயாஸ்கோப்புச் சாலம்போற் பார்த்துலகை வாழ்வைத்
தயாவொடனம் யார்க்குந் தருவாய்—பயாஸ்கோப்புச்
சாலமது மெய்யானாற் சத்தியமா மிவ்வாழ்வு
கோலமறு நெஞ்சினனே கூறு. (௧௪௬)

தோன்மினுக் கின்பத்தாற் சோர்ந்தீர்க ளன்னமிட
தோன்மினுக் கோகிணஞ்சீழ் சோதிப்பீர்—தோன்மினுக்காற்
கெட்டவர்கள் கோடியுண்டு கேடிலறஞ் செய்யாமற்
பட்டவர்கள் கோடி படைத்து. (௧௪௭)

ஆலமென நீலிகளுக் காட்பட்டிங் கன்னமிடாத்
ஆல மதிகொண்டு ஆன்புறுவாய்—காலனுக்கே
யாட்பட்டு நிற்பதற்கோ வையோ பொருளீட்ட
னட்பட் டிருப்பதற்கோ நாட்டு. (௧௪௮)

சாமியாஞ் சற்குரவன் றந்தவொரு தன்னருளாற்
காமியமற் றன்னமிடக் கற்பித்தே—னேமிமனத்
தின்வயமா காதெளியோர்க் கின்சொலுட னன்னமிட்டார்
வன்னமனர் பற்றறப்பார் வாழ்ந்து. (௧௪௯)

பண்டிதரும் பாமரரும் பார்த்துய்வா ரிந்நிலைச்
சண்டியா யுள்ளார் சழக்குரைப்பார்—பண்டிதரே
பற்றற்றார்க் கிந்து படித்துரைத்தெல் லோர்க்குமா
னற்று ளடைமி னயந்து. (௧௫௦)

வாழி.

அன்னமிடு வாருநீ றக்கணிந் தைந்தெழுத்து
னுன்னிச் செபிக்கு முயர்ந்தாரும்—பொன்னனைய
வென்பரம வாரியனு மாரியனு மின்னூலும்
பன்னூலும் வாழ்கவிப் பார்.

அன்னதான விளக்கம்

முற்றிற்று.

பாயிரம் வாழ்த்து உட்படச் செய்யுள் ககூா.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சாத்துகவி.

இந்நூலாசிரியரின் மாணவர்களுள் ளொருவர்

சென்னை, இராயபுரத்திற்கடுத்துள்ள சிவஞானபுரம்.

காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகரியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

செல்வமுளார் வறியவர்க ளுளமுவக்க வுணவதனைத் தினமு
நல்கித், தொல்வினைக ளறுத்தென்று மாயாத வின்புற்றுத் துன்னி
வாழச், சொல்வளங்கண் மலியன்ன தானவிளக் கம்மெனுநூல்
சொற்றுனோர்ந்து, வல்வினையின் றனையாண்ட சாமிகுப்பு சாமி
குரு வளவன் மாதோ.

68636

கந்தன் பிரஸ், 32. பிராட்வே. மதராஸ்.

26

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 86
செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம் 86
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமியவர்களியற்றிய

புத்தகங்கள்.

	விலை அணா.
1. குருஸ்தவம்	1
2. போத விளக்கம்	2
3. சொரூபானந்த விளக்கம்	1
4. அநுபவானந்த விளக்கம்	1
5. சாமி விளக்கம்	1
6. திருவள்ளுவர் தோத்திர விளக்கம்	1
7. கற்பு விளக்கம்	3
8. அன்னதான விளக்கம்	2
9. கருணை விளக்கம்	2
10. நன்மதி தீபம்	4
11. விபூதி விளக்கம்	4
12. ஞானசார விளக்கம்	1
13. துறவு நிலை விளக்கம்	4
14. இல்லறவொழுக்க விளக்கம்	4

ஷை விளக்கங்களும் தீபமும் அரிய பெரிய தத்துவ ஆராய்ச்சிகளையும், நீதிகளையும், பல வித்வான்களின் அபிப்பிராயங்களையும் பெற்று, வெகுஜன சமூகத்தில் புலவர் பலரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டனவாம்.

இந்நூற்களின் விக்கிரயப் பொருள், இந்நூற்களின் ஆசிரியர் நடாத்தும் ஸ்ரீ. சகுரு. சச்சிதானந்த சுவாமிகளின் குருபூஜை மகத்காரியத்திற்கே உபயோகிக்கப்படுவதால், இவற்றை யாவரும் வாங்கிப் பெரும்புண்ணியத்திற் காளாவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனன்.

புத்தகங் கிடைக்குமிடங்கள்.

சிப்பன் பிரஸ், சென்னை.

ஸ்ரீமத். ஞானானந்த மணவாள முனி.

ஸ்ரீ. சாது நாராயண தேசிகர் மடாலயம்,
நெ. 3, தையப்ப முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பேட்டை,
சென்னை.

கோ. வடிவேலு செட்டியார்,
வேதாந்தசங்கம், சிந்தாதிரிபேட்டை,
சென்னை.

தே. அ. சாமிகுப்புசாமியவர்கள்
ஸ்ரீ, சச்சிதானந்த சங்கத்தலைவர்,
36, வெங்கடேச பத்தன் வீதி,
பெருமாள்பேட்டை,
வேப்பேரி போஸ்டு, சென்னை.

இங்ஙனம்,

காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகர்,
3, மணியக்கார சௌல்ட்ரி ரோட்,
இராயபுரம் போஸ்டு, சென்னை.